உ

அருள்மிகு அத்தனூர் அம்மன் துணை.

ஆலய தரிசனம் !
பாப விமோசனம் !!

கோபுர தரிசனம் !
கோடி புண்ணியம் !!

குலம் வளர குல தெய்வ வழிபாடு



நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், குருக்கபுரம் கிராமம்,

**பாரக்கல்புதூரில் எழுந்தருளியுள்ள**

**இராசிபுரம் நாடு விழியன்குல கொங்கு நாட்டுக்கவுண்டர்கள்**
**குடிபாட்டு மக்களுக்கு மட்டுமே பாத்தியப்பட்ட குலதெய்வம்**

# அருள்மிகு அத்தனூர் அம்மன், அருள்மிகு விநாயகர்,
# அருள்மிகு அத்தாயி அம்மன், அருள்மிகு கருப்பனார் சுவாமி,
# அருள்மிகு முனியப்பன் சுவாமி மற்றும்
# அருள்மிகு கன்னிமார் சுவாமி திருக்கோயில்கள்

## சித்திரை திருவிழா அழைப்பிதழ் - 2023

உ

அருள்மிகு அத்தனூர் அம்மன் துணை.

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், குருக்கபுரம் கிராமம், பாரக்கல்புதூரில் எழுந்தருளியுள்ள

**இராசிபுரம் நாடு விழியன்குல கொங்கு நாட்டுக்கவுண்டர்கள்**
**குடிபாட்டு மக்களுக்கு மட்டுமே பாத்தியப்பட்ட குலதெய்வம்**

## அருள்மிகு அத்தனூர் அம்மன், அருள்மிகு விநாயகர், அருள்மிகு அத்தாயி அம்மன், அருள்மிகு கருப்பனார் சுவாமி, அருள்மிகு முனியப்பன் சுவாமி மற்றும் அருள்மிகு கன்னிமார் சுவாமி திருக்கோயில்கள்

# சித்திரை திருவிழா அழைப்பிதழ் - 2023

**ஸ்ரீ விநாயகர் துதி**

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
அடியார்கள் பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் மன்னோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை.

**ஸ்ரீ அம்மன் துதி**

சித்தமோர் நிலைநின்று சிவமாக உலகைக்காண
அத்தனூர் அம்மன் இந்த அவனிக்கு மதிதருவாள்
சித்தனார் மலையின் பக்கம் சிறப்புற கோவில் கொண்ட
சக்தியாம் ஜகதன்னையே சாந்தமாம் தன்மை தருவாள்

**பேரன்புடையீர், வணக்கம்.**

நிகழும் மங்களகரமான ஸ்ரீ சுபகிருது ஆண்டு **பங்குனி மாதம் 22-ம் நாள் (05-04-2023) புதன்கிழமை** முதல் திருவிழா தொடங்கி, நாளது **சோபகிருது ஆண்டு சித்திரை மாதம் 8-ம் நாள் (21-04-2023) வெள்ளிக்கிழமை** வரை **திருக்கோயில் சித்திரை திருவிழா** பின்கண்ட நிகழ்ச்சி விபரப்படி வெகு சிறப்பாக நடைபெற இருப்பதால் விழியன்குல கொங்கு நாட்டுக் கவுண்டர்கள் பங்காளிகள் அனைவரும் குடும்பத்தினருடனும், தமது மாமன், மைத்துனர்கள், சகோதர, சகோதரிகள், உற்றார் உறவினர்கள் அனைவரையும் அழைத்து வந்து திருவிழாவில் கலந்து கொண்டு அருள்மிகு அத்தனூர் அம்மனை வேண்டி, அன்னையின் திருவருளைப் பெற்று, விழாவினைச் சிறப்புடன் நடத்தி கொடுக்க வேண்டுமாய் அன்புடன் அழைக்கின்றோம்.

**பொங்கல் நாள் :**
**சித்திரை மாதம் 6-ம் நாள் (19-04-2023) புதன்கிழமை**

இங்ஙனம்,

**இராசிபுரம்நாடு விழியன்குல கொங்கு நாட்டுக்கவுண்டர்கள் நல அறக்கட்டளை**

பாரக்கல்புதூர்.

பதிவு எண். 31/2012 மற்றும் 50/2020

# சித்திரை திருவிழா நிகழ்ச்சி நிரல்.

| நாள் | நேரம் | நிகழ்ச்சி விபரம் |
|---|---|---|
| சுபகிருது வருடம் பங்குனி மாதம் 22-ம் நாள் (05-04-2023) புதன்கிழமை | காலை 6.00 மணிக்குமேல் 7.30 மணிக்குள் | முகூர்த்தக்கால் |
| சுபகிருது வருடம் பங்குனி மாதம் 29-ம் நாள் (12-04-2023) புதன்கிழமை | காலை 9.00 மணிக்கு | பாரக்கல்புதூர் விநாயகர் கோவிலிலிருந்து காவேரி புனிதத் தீர்த்தக்குடம் எடுத்தல் |
| | காலை 10.00 மணிக்கு | ஸ்ரீ கணபதி ஹோமம் தொடர்ந்து அபிஷேகம், தீபாராதனை |
| சுபகிருது வருடம் பங்குனி மாதம் 30-ம் நாள் (13-04-2023) வியாழக்கிழமை | மாலை 4.00 மணிக்குமேல் | முதலாம் நாள் பூஜை<br>அபிஷேகம், உற்சவமூர்த்தி திருவீதி உலா |
| சோபகிருது வருடம் சித்திரை மாதம் 01-ம் நாள் (14-04-2023) வெள்ளிக்கிழமை | மாலை 4.00 மணிக்குமேல் | இரண்டாம் நாள் பூஜை<br>அபிஷேகம், உற்சவமூர்த்தி திருவீதி உலா |
| சோபகிருது வருடம் சித்திரை மாதம் 02-ம் நாள் (15-04-2023) சனிக்கிழமை | மாலை 4.00 மணிக்குமேல் | மூன்றாம் நாள் பூஜை<br>அபிஷேகம், உற்சவமூர்த்தி திருவீதி உலா |
| சோபகிருது வருடம் சித்திரை மாதம் 03-ம் நாள் (16-04-2023) ஞாயிற்றுக்கிழமை | மாலை 4.00 மணிக்குமேல் | நான்காம் நாள் பூஜை<br>அபிஷேகம், உற்சவமூர்த்தி திருவீதி உலா |
| சோபகிருது வருடம் சித்திரை மாதம் 04-ம் நாள் (17-04-2023) திங்கட்கிழமை | மாலை 4.00 மணிக்குமேல் | ஐந்தாம் நாள் பூஜை<br>அபிஷேகம், உற்சவமூர்த்தி திருவீதி உலா |
| சோபகிருது வருடம் சித்திரை மாதம் 05-ம் நாள் (18-04-2023) செவ்வாய்கிழமை | பகல் 1..00 மணிக்கு | சமுதாய பெரியோர்களுக்கு மரியாதை செய்தல் |
| | மாலை 4.00 மணிக்குமேல் | ஆறாம் நாள் பூஜை<br>அபிஷேகம், உற்சவமூர்த்தி திருவீதி உலா |
|  | இரவு 8.00 மணிக்கு  | கொங்கு நாட்டின் பாரம்பரியம், சின்னகரகப்பாளையம், கொங்கு ஒயிலாட்டக்குழுவினர் வழங்கும் கொங்கு ஒயிலாட்டம் மற்றும் ஸ்ரீ ஈசன் வள்ளி கும்மி கலை நிகழ்ச்சி நடைபெறும் |

G. பழனிவேலு | 94420 03325

# சித்திரை திருவிழா நிகழ்ச்சி நிரல்.

| நாள் | நேரம் | நிகழ்ச்சி விபரம் |
| --- | --- | --- |
| சோபகிருது வருடம் சித்திரை மாதம் 06-ம் நாள் (19-04-2023) புதன்கிழமை | காலை 9.00 மணிக்கு | **பொங்கல் வைத்தல்** |
| | காலை 10.00 மணிக்கு | **பொங்கல் மற்றும் மாவிளக்கு பூஜை, மகா தீபாராதனை** |
|  | காலை 11.44 மணிக்கு | **சுவாமி ரதம் எழுந்தருளல்** |
| | மாலை 4.30 மணிக்கு | **ரதம் வடம் பிடித்தல் — ரத உலா** |
| சோபகிருது வருடம் சித்திரை மாதம் 07-ம் நாள் (20-04-2023) வியாழக்கிழமை | மாலை 6.00 மணிக்குமேல் 9.00 மணிக்குள் | **சத்தாபரணம் வாணவேடிக்கை** |
| சோபகிருது வருடம் சித்திரை மாதம் 08-ம் நாள் (21-04-2023) வெள்ளிக்கிழமை | காலை 7.00 மணிக்குமேல் 9.00 மணிக்குள் | **மஞ்சள் நீராடுதல்**<br>01-04-2022 முதல் 31-03-2023ம் தேதி முடிய ஆண்டு வரவு - செலவு கணக்கு பார்த்தல் மற்றும் ஒப்புதல் வழங்குதல் |

## பங்காளிகளுக்கு வேண்டுகோள்

சித்திரை திருவிழா செலவுக்காக குடும்ப வரி ரூ. 1000/- மட்டும் ஊர் பொறுப்பாளர் வசம் கொடுத்து இரசீது பெற்றுக்கொள்ளவும். திருக்கோவில் கட்ட செலுத்த வேண்டிய குடும்ப வரி, தலைகட்டு வரி மற்றும் சிலை வரி பாக்கி உள்ளவர்கள் செலுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. நமது பங்காளிகள் குடும்பத்தில் திருமணம் ஆன ஆண்கள் அனைவரும் தனி குடும்ப வரியாக செலுத்தி அறக்கட்டளையின் உறுப்பினராக சேர்த்து தங்களது உரிமையை அறக்கட்டளையில் நிலைநாட்டிக்கொள்ள வேண்டப்படுகிறது.

திருவிழாவிற்கு தேவைப்படும் தென்னை பச்சை மட்டை, தேங்காய், வாழை மரம் மற்றும் கூந்தல் பனைகளை திருவிழா காலங்களில் ஊர்வாரியாக கோயிலில் கொண்டு வந்து 18-04-2023 தேதி காலை 9.00 மணிக்குள் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. அனைத்து தினங்களிலும் **அன்னதானம்** நடைபெறும். அன்னதானம் செய்ய விரும்புவோர் நிர்வாகத்தை தொடர்பு கொண்டு விவரம் தெரிந்துகொள்ளவும்.

இங்ஙனம்,

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
| --- | --- | --- |
| அ. வெங்கடாசலம் | மாணிக்கம் (எ) இலட்சுமணன் | ATC K. பெரியசாமி |
| செல் 94430 65303 | செல் 95007 74656 | செல் 94879 97246 |

| அமைப்புச் செயலாளர் | துணை தலைவர் | துணை தலைவர் | இணைச் செயலாளர் |
| --- | --- | --- | --- |
| கை. தேவராஜி | R. இரத்தினசபாபதி | S. குமரவேல் | T.V. பாலசுப்பரமணியம் |
| செல் 82209 23936 | செல் 96981 90999 | செல் 99947 72036 | செல் 94425 40677 |

திருப்பணிக்குழுத் தலைவர் Er. P. கணேசன் செல் 94432 49479

மற்றும் பங்காளிகள், அறங்காவலர்கள், நிர்வாக குழு, திருப்பணிக்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,
இராசிபுரம்நாடு விழியன்குல கொங்கு நாட்டுக்கவுண்டர்கள் நல அறக்கட்டளை,
பாரக்கல்புதூர். பதிவு எண். 31/2012 மற்றும் 50/2020
குருக்கபுரம் அஞ்சல், ஆண்டகலூர்கேட், இராசிபுரம் வட்டம், நாமக்கல் மாவட்டம்.

ஸ்ரீ மாரியம்மன் பிரிண்டர்ஸ்
இராசிபுரம். செல்: 97904 50088

i/poo.maa/kongu vizhi/1x4 athanur amman-2023